## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-9 - சொல்லு
## (திருப்பரமேச்சுர விண்ணகரம்)

1128 * சொல்லுவன் சொற்பொருள் தானவையாய்ச் * சுவை ஊறு ஒலி நாற்றமும் - தோற்றமுமாய் *
நல்லரன் நாரணன் நான்முகனுக்கு[1] * இடந்தான் தடம் சூழ்ந்து அழகாய – கச்சி **
பல்லவன் வில்லவன் என்று உலகில் * பலராய்ப் பல வேந்தர் வணங்கு கழல்
பல்லவன் * மல்லையர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் - அதுவே 1

1129 கார்மன்னு நீள் விசும்பும் * கடலும் சுடரும் நிலனும் மலையும் * தன் உந்தித்
தார்மன்னு தாமரைக் கண்ணனிடம் * தட மாமதிள் சூழ்ந்து அழகாய கச்சி **
தேர்மன்னு தென்னவனை முனையில் செருவில் * திறல் வாட்டிய திண் – சிலையோன் *
பார்மன்னு பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் அதுவே 2

1130 * உரந்தரு மெல்லணைப் பள்ளி கொண்டான் * ஒருகால் முன்னம் மா - உருவாய்க் கடலுள் *
வரந்தரு மாமணி வண்ணனிடம் * மணி மாடங்கள் சூழ்ந்து அழகாய கச்சி **
நிரந்தவர் மண்ணையில் புண்ணுகர் வேல் * நெடுவாயில் உகச் செருவில் – முன நாள் *
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் அதுவே 3

1131 அண்டமும் எண்திசையும் நிலனும் * மலை நீரொடு வான் எரிகால் முதலா *
உண்டவன் எந்தை பிரானது இடம் * ஒளி மாடங்கள் சூழ்ந்து அழகாய – கச்சி **
விண்டவர் இண்டைக் குழாமுடனே * விரைந்தார் இரியச் செருவில் முனிந்து *
பண்டு ஒருகால் வளைத்தான் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் - அதுவே 4

1132 தூம்புடைத் திண்கை வன்தாள் களிற்றின் * துயர் தீர்த்து அரவம் வெருவ * - முன நாள்
பூம்புனல் பொய்கை புக்கான் அவனுக்கு * இடந்தான் தடம் சூழ்ந்து அழகாய – கச்சி **
தேம்பொழில் குன்றெயில் தென்னவனைத் * திசைப்பச்[2] செரு மேல் வியந்து – அன்று சென்ற *
பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் அதுவே 5

[1] நான்முகன் நாரணனுக்கு
[2] திகைப்ப

1133 திண் படைக் கோளரியின் உருவாய்த் * திறலோன் அகலம் செருவில் முன -
நாள் *
புண் படப் போழ்ந்த பிரானது இடம் * பொரு மாடங்கள் சூழ்ந்து அழகாய –
கச்சி **
வெண்குடை நீழல் செங்கோல் நடப்ப * விடை[3] வெல்கொடி வேற்படை -
முன் உயர்த்த *
பண்புடைப் பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் அதுவே 6

1134 இலகிய நீள்முடி மாவலி தன் பெரு வேள்வியில் * மாண் உருவாய் முன -
நாள் *
சலமொடு மாநிலம் கொண்டவனுக்கு * இடந்தான் தடம் சூழ்ந்து அழகாய –
கச்சி **
உலகுடை மன்னவன் தென்னவனைக் * கன்னி மாமதிள் சூழ் கருவூர் வெருவ *
பல படை சாய வென்றான் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் அதுவே 7

1135 குடைத் திறல் மன்னவனாய் ஒருகால் * குரங்கைப் படையா * மலையால் -
கடலை
அடைத்தவன் எந்தை பிரானது இடம் * மணி மாடங்கள் சூழ்ந்து அழகாய –
கச்சி **
விடைத் திறல் வில்லவன் நென்மெலியில் * வெருவச் செருவேல் வலங்கைப் –
பிடித்த *
படைத் திறல் பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் -
அதுவே 8

1136 பிறையுடை வாணுதல் பின்னை திறத்து * முன்னே ஒருகால் செருவில் -
உருமின் *
மறையுடை மால்விடை ஏழ் அடர்த்தாற்கு * இடந்தான் தடம் சூழ்ந்து –
அழகாய கச்சி **
கறையுடை வாள் மற மன்னர் கெடக் * கடல் போல் முழங்கும் குரல் –
கடுவாய் *
பறையுடைப் பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர விண்ணகரம் -
அதுவே 9

1137 * பார்மன்னு தொல் புகழ்ப் பல்லவர் கோன் பணிந்த * பரமேச்சுர -
விண்ணகர் மேல் *
கார்மன்னு நீள் வயல் மங்கையர் தம் தலைவன் * கலிகன்றி குன்றாது –
உரைத்த **
சீர்மன்னு செந்தமிழ் மாலை வல்லார் * திருமாமகள் தன் அருளால் * -
உலகில்
தேர் மன்னராய் ஒலி மாகடல் சூழ் * செழுநீர் உலகாண்டு -
திகழ்வர்களே 10

---
[3] விட / விறல்

**அடிவரவு:** சொல்லு கார் உரம் அண்டமும் தூம்பு திண் இலகிய குடை பிறை பார் மஞ்சாடு